# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 20 புதன்கிழமை 06.11.2024 கதிர் 409



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel






## கட்சிக்குள் பிளவு எதுவும் இல்லை

அடித்துச் சொல்கிறார் சந்திரசேகர்

சிறப்புச் செவ்வி 4 ஆம் பக்கத்தில்

# ஏக்கிய ராச்சியவை ஏற்றுக் கொண்டதென்பது இனத்தின் சாபக்கேடு: வரலாற்றுத் துரோகம்!

## கிளிநொச்சியில் வைத்துக் கஜேந்திரகுமார் சாடல்

**கிளிநொச்சி, நவ. 06**

**"ஏக்கியராச்சிய" என்ற ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொண்டு அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும்வகையில் 16 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்டமையானது எமது இனத்தின் சாபக்கேடாகும் என்று அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார்.**



இன்று கிளிநொச்சியில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பரப்புரைச் செயற்பாடுகளுக்கு மத்தியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த அவர், "ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா புதிய அரசியல் அமைப்பை கொண்டு வருவதாக அறிவித்துள்ளார். அந்த அரசியல் அமைப்பு என்பதில் 2015 இல் நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற மைத்திரி பால சிறிசேன - ரணில் கொண்டு வந்த இடைக்கால அறிக்கையை மீளக் கொண்டு வரும் திட்டம் இருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். அந்த திட்டத்தில் தெளிவாக இந்த அரசியலைப்பானது "ஏக்கிய ராச்சிய" என்று சொல்லப்படுகின்ற ஒற்றையாட்சி என்பதை குறிப்பிடுகின்றது. 2017 முதல் நாங்கள் இதனை மக்களுக்குத் தெளிவாகச் சொல்லி வருகின்றோம்.

அன்றைய காலப்பகுதியில், வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18

2➤

## வடக்கு – கிழக்குக்கு டெங்கு எச்சரிக்கை!

கொழும்பு, நவ.06

வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் வைத்தியர் லஹிரு கொடிதுவக்கு இதனைத் தெரிவித துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள 8 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், நாடளாவிய ரீதியில் 42 ஆயிரத்து 730 பேர் டெங்கு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடகிழக்கு பருவ பெயர்ச்சி மழை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோய் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் வைத்தியர் லஹிரு கொடிதுவக்கு மேலும் தெரிவித்தார். (ஐ-03)

## மட்டு. வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கூடம் திறப்பு!




மட்டக்களப்பு, நவ 06

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சத்திர சிகிச்சைப் பிரிவை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கை சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித குணரத்ன மகிபால ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி முரளிதரன், கிழக்கு மாகாண சுகாதார செயலாளரும், மட்டக்களப்பு மாநகர ஆணையாளருமான எஸ். சிவலிங்கம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கலராஞ்சனி கணேசலிங்கம், சுகாதார அமைச்சு, கிழக்கு மாகாண சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக அலகுகளைச் சேர்ந்த உயரதிகாரிகள், மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இம்மருத்துவமனை விடுதிகளில் அனுமதிக்கப்படும்

2➤

## இலஞ்சம் வாங்கிய அதிகாரிகளுக்கு 35 வருட கடூழிய சிறைத் தண்டனை!

கொழும்பு, நவ. 06

இலங்கை சுங்கத்தின் முன்னாள் அதிகாரிகள் நால்வருக்குத் தலா 35 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை சுங்கத்தில் இருந்து விடுவிப்பதற்காக இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் தொடரப்பட்ட வழக்கு இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 125 மில்லியன் ஷரூபா அபராதமும், 35 வருட கடூழியச்சிறைத்தண்டனை விதித்தும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே உத்தரவிட்டார்.

2015ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்துச்சபைக்கு வழங்குவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பஸ் உதிரி பாகங்களை விடுவிப்பதற்காக பஞ்சிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் 125 மில்லியன் ஷரூபா இலஞ்சமாகப் பெற்றமையே இதற்குக் காரணமாகும். (ஐ)

## பிரதமர் அலுவலக மருத்துவப் பிரிவு கலைப்பு பொதுச் சுகாதார சேவையுடன் இணைப்பு!



கொழும்பு, நவ 06.

பிரதமர் அலுவலகத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்த மருத்துவ சிகிச்சை அலகு கலைக்கப்பட்டு, பொதுச் சுகாதார சேவையுடன் இணைக்கப்பட்டுள்ளது என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் பிரதமர் அலுவலக மருத்துவ

2➤

## வைத்தியர் ஷாபி விடுதலை!


குருநாகல், நவ 06.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபிக்கு எதிராக குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதுடன், அனைத்துக் குற்றச் சாட்டுகளிலிருந்தும் வைத்தியர் ஷாபியை விடுவித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வைத்தியர் ஷாபிக்கு எதிரான குற்றச் சாட்டுகளில் போதிய ஆதாரம்

2➤

## அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு!



வோஷிங்டன், நவ. 06

அமெரிக்காவின் 47 வது ஜனாதிபதியாகக் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹரிஸும், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பும் போட்டியிட்டனர்.


2➤

## மட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)







நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, மற்றும் அங்கு இடம்பெறும் அதிகளவான அறுவை சிகிச்சைகள் காரணமாக இம் மருத்துவமனையில் புதிய அறுவை சிகிச்சை பிரிவுக்கான தேவை 2015 ஆம் ஆண்டில் உணரப்பட்டிருந்தது. இதற்கான திட்டம் முன்மொழியப்பட்ட காலத்தில், சுமார் 1280 நோயாளிகள் சத்திர சிகிச்சைக்காக காத்திருப்புப் பட்டியலில் இருந்தனர். இங்கு போதிய வசதிகள் இல்லாததால், நோயாளர்கள் அதிக காலப்பகுதிக்குக் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக இங்கு புதிய சத்திர சிகிச்சை பிரிவு ஒன்றை நிர்மாணிப்பதற்கான உதவிகளை வழங்க இந்திய அரசாங்கம் இணங்கியது. இந்த திட்டப்பணிக்காக 275 மில்லியன் இலங்கை ஷரூபாவை நன்கொடை உதவியாக வழங்க இந்தியா தீர்மானித்த நிலையில் 2016 பெப்ரவரியில் அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் இந்திய அரசு கூடுதல் நிதியை குறித்த திட்டத்துக்காக ஒதுக்கிய நிலையில் இத்திட்டத்திற்கான மொத்த இந்திய ஒதுக்கீடு 302 மில்லியனாக உயர்வடைந்தது.

தகவல் தொழில் நுட்பம் சார்ந்த பணிகள், தொழில்நுட்ப வேலைகள், மின்சார வசதிகள், நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வடிகால் அமைப்புகள் போன்ற அத்தியாவசிய உட்கட்டமைப்புகளுடனான நான்கு அதிநவீன சத்திரசிகிச்சை கூடங்கள் மற்றும் பத்து அதி தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்களுடன் 1464 சதுர மீட்டர் பரப்பளவில் இரண்டு மாடிக் கட்டடங்களை அமைக்கின்றமையே இத்திட்டத்தின் பரந்த உள்ளடக்கமாகும்.

நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக காரணமாக இத்திட்டத்தில் சில சவால்கள் ஏற்பட்ட நிலையில், இத்திட்டமானது அண்மையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இச்சத்திர சிகிச்சை அலகானது பரீட்சார்த்த செயற்பாடுகளின் பின் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, இம்மருத்துவமனை அதிகாரிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில், மின்பிறப்பாக்கி, மருத்துவ வாயு மற்றும் அருகிலுள்ள சிறுநீரக பராமரிப்பு அலகிலிருந்து மின் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான் வழிவகைகளை அமைத்தல் போன்ற மேலதிக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இந்தியா மேலதிக உதவிகளை வழங்கியது. (ஐ-06)




## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அலகில் செயற்பட்டு வந்த மருத்துவர்கள் மற்றும் பணியாட் தொகுதியினர் சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் வகையில் நேற்று சுகாதார அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளனர். பிரதமர் மருத்துவ அலகுக்காக, பிரதமர் அலுவலகத்தின் கீழ் இயக்கப்பட்டு வந்த இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரியினால், சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபாலவிடம் திறப்புகள் மற்றும் ஆவணங்கள் பிரதமர் அலுவலகத்தில் வைத்து நேற்று மாலை கையளிக்கப்பட்டன என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வைத்தியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லாத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய வழக்குத் தள்ளுபடி செய்யப்படுவதாக நீதவான் இன்று உத்தரவிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு குருநாகல் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி சட்டத்துக்குப் புறம்பான முறையில் தொற்றுநீக்கம் செய்ததாகவும், பெண்கள் பலரது சம்மதமின்றிக் கருத்தடை சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு, கட்டாய விடுப்பில் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதுடன், அதன் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுமிருந்தர். (ஐ)

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடக்கம் முதலே இருவரும் கடுமையான பிரசார யுக்திகளை கையாண்டனர். அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்ட கருத்துக் கணிப்புகள் பெரும்பாலும் கமலா ஹரிஸ/க்கு ஆதரவாக இருந்தது. இதனால் டிரம்ப் தனது பிரச்சார முறையை மாற்றினார். டிரம்ப்பிற்கு ஆதரவாக உலக பணக்காரரான எலான் மஸ்க் களம் இறங்கி கடுமையாக பிரசாரம் செய்தார். இருவருக்கும் இடையே கடுமையான பிரசார போட்டி நிலவியது.

இதற்கிடையே நேற்று வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. இதனை தொடர்ந்து வாக்கு எண்ணிக்கையும் தொடங்கியது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதலே டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து முன்னிலை பெற்று வந்தார். தேர்தல் முடிவுகள் இறுதியான நிலையில், டொனால்ட் டிரம்ப் அபார வெற்றி பெற்றுள்ளார். தனது போட்டியாளர் கமலா ஹரிஸை விட அதிக வாக்குகள் பெற்று டொனால்ட் டிரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். (ஐ)

## ஏக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் 16 பேர் தமிழ்த்தேசிய கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் .அந்தப் 16பேரும் இடைக்கால அரசியல் அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் தான். ஒற்றையாட்சி முறையை 2015ல் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து இருப்பது என்பது எமது இனத்துக்கு ஒரு சாபக்கேடு

2015இல் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மீண்டும் இந்த நாடாளுமன்றிலும் தெரிவு செய்யப்படுவார்களானால், அரசியலமைப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புன் நிறைவேற்றப்பட்டதாக ஜனாதிபதி காட்டிக்கொள்வார்.

தமிழரசுக்கட்சியினர் இந்த அரசியலமைப்பைத் தாம் தான் தயாரித்தனர் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாபெரும் வரலாற்று துரோகங்களைச் செய்தவர்களில் சம்மந்தன், சுமந்திரன், சித்தார்த்தன் ஆகியோர் பிரதானமானவர்கள். சுமந்திரனின் செயற்பாட்டை விடுதலைப்புலிகளின் தத்துவ ஆசிரியராக இருந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு ஒப்பிட்டவர் இந்த மண்ணைச் சேர்ந்த சிறீதரன் தான். கடந்த காலங்களில் சுமந்திரனை நியாயப்படுத்தியவர் அவர்.

இவர்கள் அனைவரும் மக்களால் நிராகரிக்கப்பட வேண்டும் வடக்கு கிழக்கில் மக்கள் அறுதிப் பெரும்பான்மையை சைக்கிள் சின்னத்துக்கு வழங்கி குறைந்தது 10 நாடாளுமன்ற ஆசனங்களையாவது பெறுவதற்கு ஆணை வழங்க வேண்டும்" என்று குறிப்பிட்டார். (இ - 113)








இலங்கையில் டிஜிற்றல் பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வொன்று இன்று புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஹட்டன் நஷனல் வங்கியின் வடபிராந்திய கடன்துறை மேலாளர் ம. தயாகரன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டு டிஜிற்றல் பொருளாதாரம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.






# மிதி வெடி

இண்டைக்குப் போனா சரியா ஒரு கிழமை இருக்குது... "எலக்சன்"... "எலக்சன்" எண்டு சொல்லி அதுவும் வந்துட்டுது...

வீடு, வீடாத் தேடி வாற ஆக்கள் எல்லாரும் அடுத்த கிழமைக்குப் பிறகு... ஐயா ஆரு எண்டு கேப்பினம் பாருங்கோ.

நான் முந்தித் தொடக்கம் சொன்னமாதிரி, ஒண்டா நிண்டு ஒரு குடைக்குள்ள படிஞ்ச ஆக்கள் எல்லாரும், பத்தும், பதினெட்டுமாப் பிரிஞ்சு போய் நிக்கினம்.

பிரிஞ்சது தான் பிரிஞ்சிச்சினம், பிரிஞ்சு போனவையள் எண்டாலும் ஒண்டா நிக்கினமோ எண்டு பாத்தா அதுவும் இல்லைப் பாருங்கோ....

வீட்டில இருந்து கோவிச்சுக் கொண்டு வெளிக்கிட்ட ஒரு கூட்டம் சங்கு ஊதிக் கொண்டிருக்க, இங்கால ஒரு மாம்பழம் எண்டு கொண்டு வெளிக்கிட்டவையெல்லோ? வெளிக்கிட்டவையாவது தங்களுக்குள்ள ஒற்றுமையா இருக்கினமோ எண்டா அதுவும் இல்லையாம் பாருங்கோ....

அப்ப எப்பிடி எங்கட இனம் உருப்படும். எல்லாரும் தங்கள் தங்கள் விளம்பரங்களிலையும், தாங்கள் தாங்கள் "வோட்டு"ச் சேர்க்கிறதிலயும் தான் குறியா இருக்கினமாம் பாருங்கோ....

வடமராட்சியில இருந்து வீட்டில "எலக்சன்" கேக்கிற தம்பிக்குக் கடும் செல்வாக்கு இருக்கெண்டது ஊரரறிஞ்ச விசியம். உது தென்மராட்சித் தம்பிக்கு அவ்வளவாப் பிடிப்பில்லையாம்... அவற்றை வாக்கைச் சிதைக்க வேணும் எண்டு சொல்லி இறக்கியிருக்கிற அம்மணியைக் கொண்டு அவருக்குப் போடாதேங்கோ எண்டு சொல்லப்பண்ணிக் கொண்டு இருக்கிறாராம்... முதலில உங்களுக்குள்ள இருக்கிற குத்து வெட்டை முடிவுக்குக் கொண்டு வாங்கோ அதுக்குப் பிறகு மற்றவையைப் பற்றிக் கதைப்பம் எண்டு சுப்பையாண்ணை சொல்லியிருக்கிறார்... என்னவோ... தீதும் நன்றும் பிறர் தர வாராது பாருங்கோ... இன்னும் ஒரு கிழமை தான் கிடக்கு... யோசிச்சு நடந்தியள் எண்டால் சரி..

இங்கால தேர்தல் கூத்து இன்னுமொண்டு நடக்குது கேள்விபட்டனியளே?

ஆர் ஆட்சிக்கு வந்தாலும்.. நான் அமைச்சர் தான் எண்டுறவருக்கு இந்த முறை சீற் கிடைக்கிறதே கஸ்டம் போல கிடக்குது... எங்கட தமிழத் தேசியம் பேசுற ஆக்கள் எல்லாம் தங்களுக்குள்ள அடிபட்டு, இருக்கிற வாக்குகளைச் சிதைச்சுச் சின்னாபின்னமாக்கிப் போயிட்டினம், அந்தாளுக்கிருக்கிற வாக்கு வங்கி அப்பிடியே இருக்குது... எப்பிடியும் அவருக்கு ஒரு சீற் "கொன்போர்ம்" எண்டு தான் நானும் யோசிச்சனான்...

ஆனா.. இப்ப திடீரெண்டு சொல்லுற கணக்குகளைப் பாத்தா அந்த மனுசனுக்குச் சீற் வராது போலக் கிடக்கு... இவ்வளவு நாளும் இந்த மனுசனோட நிண்ட கடற் தொழில் செய்யுற சனங்களிண்ட சங்கம் எல்லாம் இவருக்கு ஆதரவு இல்லை எண்டு கூட்டாச் சொல்லீற்றினம் போல? தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமெண்டு அரசாங்கத்தோட நிக்கிற அமைப்புக்குப் பின்னால போறதுக்கு உத்தேசிச்சிருக்கினம் போல... அதால கரையோரப் பக்கங்கள், தீவகமெல்லாம் விழுகிற வாக்குகள் எனக்கென்னமோ திசை தேடிப் போயிருமோ எண்டு கிடக்குது...

ஆனாலும், ஆள் வலு சுழியன் பாருங்கோ.... அந்தக் காலத்திலயே ஆளை "அத்தியடிக் குத்தியன்" எண்டு தானே சொல்லுறவை.. ஆள் இப்ப அரசியல் கூட்டங்களுக்குப் போற நேரம் பாத்து, அவற்றை தொலைபேசிக்கு ஜனாதிபதி "கோல்" எடுக்கிறாராம் எல்லோ... உங்களுக்குத் தெரியுமே?

கார சாரமாக் கூட்டத்தில பேசிக் கொண்டு இருக்கிற நேரம் பாத்து, ஐயான்ர தொலைபேசிக்கு அழைப்பு வருமாம்.... அழைப்பில் தோழர் அநுரா எண்டு சொல்லி படம் விழுமாம்.... அப்பிடியே தூக்கி மொத்தக் கூட்டத்துக்கும் "பொறுங்கோ... அநுர தோழர் கூப்பிடுறார்" எண்டு "பவ்லா" காட்டிப் போட்டு போய் கொஞ்ச நேரம் கதைக்கிற மாதிரிக் கதைச்சுப் போட்டு வந்து, தோழர் தான் எடுத்தவர்... நீங்கள் வாக்கைப் போட்டு என்னை "எம்.பி" ஆக்கிற்றியள் எண்டா.. தோழரிண்ட ஆடசியில நானும் அமைச்சர் தான் எண்டுறாராம்.

எப்பிடியிருக்குது பாத்தியளே சங்கதி? கேக்கிறவன் கேனப் பயலா இருந்தால் எருமை மாடு "ஏரோப்பிளேன்" ஓடுமாம் எண்டு ஊருக்குள்ள சொல்லுறவை. அந்தக் கணக்காத் தான் இருக்குது ஐயா விடுற கதை. அநுரவில மக்களுக்கு நம்பிக்கை இருக்கெண்டால், அநுரவின்ற கட்சிக்கே வாக்கைப் போட்டு, நேரடியா அவற்றை ஆட்சியப் பலப் படுத்துவினம் தானே? அதுக்கேன் ஆயிரத்தெட்டு "ஏஜெண்ட்"?

–நரமுனி–

# கட்சிக்குள் பிளவேதும் இல்லை

## அடித்துச் சொல்கிறார் சந்திரசேகர்



**"தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் மிகவும் பலமான வேட்பாளர்கள். எங்கள் வேட்பாளர்களுக்கிடையில் வேற்றுமை கிடையாது. நாங்கள் மற்றைய கட்சிகளைப் போன்று விருப்பு வாக்குகளுக்கு பின்னால் மாத்திரம் ஓடுபவர்கள் அல்ல" என்றும், "எமது கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களிடையே பிளவேதும் இல்லை" என்றும் தேசிய மக்கள் சக்தியின் மத்திய குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமாகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

**மாலைக்கதிர் நாளிதழ், காலைக்கதிர் ரீவி ஆகியவற்றுக்காக அவர் வழங்கிய சிறப்புச் செவ்வியின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வி வருமாறு:**

**கேள்வி :**

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன? எத்தனை ஆசனங்களை நீங்கள் கைப்பற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

**பதில்:**

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆறு நாடாளுமன்ற ஆசனங்களையும் பெற வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம். அதற்காகத் தான் உழைக்கிறோம். யாழ் மாவட்டத்திலே ஆறு ஆசனங்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நாங்கள் எங்கள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஏனென்றால் நம் எல்லோருக்குமே தெரியும், கடந்த காலங்களில் மலிந்து போன, சிதைந்து போன அரசியல் கட்சிகளே காணப்படுகின்றன. அந்த வகையில் இன்றைக்கு மக்கள் மத்தியில் ஒரு பலமான கட்சியாக இருப்பது தேசிய மக்கள் சக்தி. அதே போன்று யாழ்ப்பாணத்திலே மிகவும் பலமான நடவடிக்கைகளை எடுப்பதும் கூடுதலான மக்கள் சந்திப்புக்களை செய்வதும் பிரச்சாரங்களை மேற்கொள்வதும் தேசிய மக்கள் சக்தி தான்.

அந்த வகையில் இளைஞர்கள் யுவதிகள் என எங்கள் பின்னால் அணிதிரண்டு கொண்டிருக்கின்றார்கள். இதனை அடிப்படையாக வைத்து நாங்கள் சொல்கின்றோம். இந்த ஆறு ஆசனங்களையும் கைப்பற்றி முதன்மையான கட்சியாக வருவதே எங்கள் இலக்கு.

**கேள்வி :**

நாடாளுமன்ற தேர்தலில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உங்கள் கட்சியின் வேட்பாளர் தெரிவு மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்தது என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

**பதில்:**

ஒன்றை நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன் கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தில் நாங்கள் நான்காவது இடத்தில் இருப்பது உண்மைதான். 2019 ஆம் ஆண்டு முடிவுகளைப் பார்க்கும் போது அன்று எங்களுக்கு கிடைத்தது நான்கு இலட்சம் வாக்குகள் என்பது அனைவரும் அறிந்ததே. அதாவது மூன்று சதவீதமான வாக்குகள். கணித சூத்திரத்தின்படி பார்க்கும் போது கோட்டாபயவுக்கு 69 இலட்சம், சஜித் பிரேமதாசவிற்கு 45 இலட்சம் அனுரவுக்கு 4 இலட்சம்.

அன்றைய காலகட்டத்தின் படி அனுர குமார திஸாநாயக்க வெல்லவே முடியாது. ஆனால் சமூக விஞ்ஞானம் அப்படியல்ல பாய்ச்சலினால் முன்னோக்கிச் செல்வது அந்த பாய்ச்சல் இன்று இடம்பெற்றிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் அரசியல் கட்சிகள் ஊடகங்கள் கூட எதிர்பாராதவகையில் இம்முறை மக்கள் ஜனாதிபதி தேர்தலில் மூன்று சதவீதமாக இருந்த வாக்குகளை 42 சதவீதமாக மாற்றி வெற்றியடைய செய்திருக்கின்றாரகள்.

அதேவேளை 2019 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் வெறும் 230 ஆக இருந்த வாக்குகள் இம்முறை 28000 ஆக அதிகரித்திருக்கின்றது. அந்த சதவீதத்தின் அடிப்படையில் பார்க்கும் போது இலங்கையிலே முதலாவது இடத்துக்கு யாழ். மக்கள் எம்மை உயரத்துவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. அந்த வகையில் எங்கள் வேட்பாளர்கள் மிகவும் பலமான வேட்பாளர்கள். எங்கள் வேட்பாளருக்கிடையில் வேற்றுமை கிடையாது. நாங்கள் மற்றைய கட்சிகளைப் போன்று விருப்பு வாக்குகளுக்கு பின்னால் மாத்திரம் ஓடுபவர்கள் அல்ல.

சிலர் கூறுகின்றார்கள் தேசிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் புதியவர்கள் அனுபவமில்லாதவர்கள் என்று நாங்கள் நாடாளுமன்றத்துக்குப் புதியவர்களாக இருக்கலாம் ஆனால் அரசியலுக்கல்ல. நாங்கள் அரசியல் அனுபவமிக்கவர்களைத்தான் வேட்பாளர்களாகக் களமிறக்கியுள்ளோம். வெளித் தோற்றத்துக்கு வேண்டுமானால் கட்சிக்குள் முரண்பாடு இருப்பது போல் உங்களுக்கு தெரியலாம் இருந்தபோதும் கூட, தேசிய மக்கள் கட்சிக்குள் எந்தவித முரண்பாடும் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிக் கொள்கின்றேன்.

அதேபோல் எல்லோருக்குமே தெரியும் இந்த தேர்தல் என்பது விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தான் தெரிவு செய்யப்படும் எனவே அந்த நிலைமைகளுக்கு ஏற்ப பிரச்சார நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்து இருக்கின்றோம். அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட்டு படிப்படியாகச் செய்து வருவதனால் தான் ஒரு பலமான நாடாளுமன்றத்தை அமைக்க ஆணை தாருங்கள் என்று நாங்கள் மக்களிடம் கேட்கின்றோம்.

**கேள்வி :**

அரசியல் அவதானிகளைப் பொறுத்தவரை தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட வேட்பாளர் தெரிவு என்பது பலவீனமான தெரிவு என்றும் அதேவேளை வேறு பலமான வேட்பாளர்களை வெல்ல வைப்பதற்கான ஒரு இரகசிய நிகழ்ச்சித்திட்டம் என்றும் பேசப்படுகின்றது அதில் உண்மை இருக்கின்றதா ?

**பதில்:**

நிச்சயாக அதில் உண்மை இல்லை. ஆனால் உங்கள் கருத்தில் ஒரு உண்மை இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் அனுபவமிக்க ஏனைய கட்சி வேட்பாளர்களோடு ஒப்பிடுகையில் எங்கள் கட்சி வேட்பாளர்கள் அனுபவம் குறைந்தவர்களாக இருக்கலாம். அதே வேளை நிச்சயமாக எங்கள் வேட்பாளர்கள் மக்களை ஏமாற்றி கட்சி தாவுகின்றவர்களாக இருக்க மாட்டார்கள்.

எனவே அவர்கள் பலமானவர்களா, பலவீனமான வர்களா என்பது குறித்து மக்களுக்கு படம் போட்டு காட்டும் களம் தான் தேர்தல் களம். அந்த தேர்தல் களத்தில் நிச்சயமாக யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் எங்கள் வேட்பாளர்கள் பலர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். அப்போது பலமானவர்கள் யார்? பலவீனமானவர்கள் யார? என்று தெரியும். இனிமேலும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்று நினைக்கின்றேன்.

**கேள்வி :**

சிறுபான்மை தமிழர்களைப் பொருத்தவரை தேசிய மக்கள் சக்தியின் விம்பமாக வடமாகாணத்தில் இராமலிங்கம் சந்திரசேகரை எடுத்துக் கொள்ளலாமா? அவ்வாறாயின் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நீங்கள் தமிழ் மக்களுக்காக அரசாங்கத்திடம் எவ்வாறு நீங்கள் செயற்படபோகின்றீர்கள்?

**பதில்:**

இந்த நேரத்தில் ஒரு விடயத்தை உங்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டும் ஊடகவியலாளர் என்ற ரீதியில் உங்கள் எல்லோருக்குமே தெரியும் 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் இந்த இடத்தில் எங்கள் அரசியல் நடவடிக்கைகளை கூடுதலாக முன்னெடுத்து இருக்கின்றோம். 30 வருட யுத்தத்தினால் பாதிகக்கப்பட்ட வட மாகாணத்தைக் கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் என்ற ரீதியில் கடந்த 10 வருடங்களாக நான் மட்டும் அல்ல என்னுடன் இணைந்து பலர் மக்கள் நலனுக்காக பயனிக்கின்றார்கள்.

அதன் ஒரு வெற்றியாகத்தான் எங்கள் கட்சி ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைந்ததையும் கூறுவேன். அந்தவகையில் நான் யாழ் மாவட்ட பிரதிநிதியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கட்சி மக்களுக்காக செயற்படும் என்பதை ஆணித்தனமாக கூறிக்கொள்கின்றேன்.

> **"எங்கள் கட்சிக்குள்ளேயே போதுமானளவு அமைச்சர்கள் இருக்கின்றார்கள். வேறு கட்சிக்காரர்களுக்கு அமைச்சரவையில் இடமில்லை."**

**கேள்வி :**

இம்முறை நீங்கள் தேர்தலில் நேரடியாக போட்டியிடவில்லை என்றாலும் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி, அமைச்சுப் பதவி கிடைத்தால் நீங்கள் அதனை ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:**

1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னனியில் முழு நேர உறுப்பினராக இணைந்து கொண்டேன். நான் அந்தக் கட்சியில் இணைந்து கொண்ட காலம் தொடக்கம் எந்த அமைச்சுப் பதவிக்காகவும் ஏனைய சலுகைகளுக்காகவும் அந்தக் கட்சியில் செயற்படவில்லை.

இரண்டு தடைவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மேல் மாகாணசபை உறுப்பினராகவும் இருந்திருக்கின்றேன். இருப்பினும் பதவி மேல் எனக்கு எந்தவிதமான ஆசையுமில்லை. கட்சி எடுக்கின்ற முடிவு.

கட்சி என்ன முடிவு எடுக்கின்றதோ அந்த முடிவினை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயார். அதுதான் மற்ற கட்சிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் உள்ள வேறுபாடு. அதேவேளை நாடாளுமன்றத்துக்குப் போக வேண்டும் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினாலும் கட்சியின் ஆணையை ஏற்று மக்கள் நலனுக்காக சேவையாற்றத் தயார்.

(8ஆம் பக்கம் பார்க்க...)


'எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557



## நாடாளுமன்றத் தேர்தல் 2024



# அநுர மீது மக்கள் நம்பிக்கை இழப்பு சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு!

யாழ்ப்பாணம், நவ. 06

தமிழர்கள் விடயத்தில் அநுர அரசும் முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே ஏமாற்று வித்தைகளைக் காட்டத் தொடங்கியுள்ள நிலையில், அநுர அரசு மீதான நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு குறைவடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக ஈ.பி. ஆர்.எல்.எப். தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்களின் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி அநுரகுமார ஜனாதிபதியாக வந்திருக்கின்ற நிலையில் உண்மையாகவே ஜனாதிபதி மீதான எதிர்பார்ப்பு எந்தளவில் உள்ளது என்பது தற்போது கேள்விக்குறியாக உள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி மீதான நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு என்பன குறைந்து வருகின்றது என்பதுதான் உண்மை. இதனால் பெரும் நம்பிக்கையின் அடிப்படையில் மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களுக்கு இப்போது ஏமாற்றமே கிடைக்கின்றது.

இவ்வாறான நிலைமையில் அரச கட்சியைப் பொறுத்தவரையில் தாங்கள்தான் தமிழ் மக்களுக்கு ஏதோ செய்வதாகக் காட்டுவதற்கு முயற்சிக்கின்றனர். அதனை எமது மக்கள் தெளிவாக முதலில் விளங்கிக்கொண்டு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

குறிப்பாக அநுரவின் அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தமிழ் மக்களுக்காகப் பலதைச் செய்வதாகச் சொல்லி இருந்தது. ஆனால், அவ்வாறு கூறிய எதனையும் அநுர தரப்பு இதுவரையில் செய்யவில்லை.

அதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சொன்னவர்கள் இப்போது நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற தொனியில் இப்போது பேச ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்களுக்குத் தாங்கள் செய்வதாகக் கூறிய எந்த விடயத்தையும் செய்யாமல் இருப்பது மாத்திரமல்லாது மாறாக இதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அதில் மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தப் போவதில்லை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாது, காணிகள் விடுவிப்பில் திட்டவட்டமான முடிவில்லை. ஆனாலும், வீதிகளைத்தான் திறப்பதில் கவனம், ஊழலுக்கு எதிரானவர்கள் என்று சொல்லி கொண்டு மிக மிக ஊழல் பேர்வழிகளையே நியமனம் செய்கின்றார்கள்.

இந்த ஆட்சியாளர்கள் உண்மையாகவே ஊழலுக்கு எதிராக இருக்கின்றார்களா? சமத்துவம்? தமிழ் - சிங்கள - முஸ்லிம் என பாகுபாடு இல்லாமல் இருக்கின்றார்களா? என்றால் அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் அதற்கு எதிராகத்தான் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் தமிழ் மக்கள் பலமான கூட்டணியொன்றை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். அதுவும் தமிழர் தரப்பு ஒன்றாக ஐக்கியப்பட்டுப் போவதன் ஊடாகத்தான் தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்க முடியும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். நாங்கள் எப்போதும் ஐக்கியப்பட்டு செயற்படவே விரும்புகின்றோம். இதற்கான அழைப்புக்களை கூட பல தடவைகள் தமிழரசுக் கட்சிக்கு விடுத்த ிருக்கிறோம்.

தமிழரசின் உள்வீட்டுக்குள்ளே ஏற்பட்ட குழப்பங்களால் அவர்கள் நீதிமன்றம் வரை சென்று அதிலிருந்து பிரிந்து சுயேச்சையாகக் கேட்கும் அளசுக்குக் கூட வந்திருக்கின்றார்கள். ஆகவே, இவ்வாறான குழப்பங்களைத் தமது கட்சிக்குள்ளேயே இவர்கள் முதலில் திருத்திக்கொள்ள வேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த பலமான - வலுவான சக்தி நாடாளுமன்றம் செல்ல வேண்டியது அவசியம். அதற்கமைய மக்கள் தமது முழுமையான ஆதரவை எமக்கு வழங்க வேண்டும்” எனவும் தெரிவித்தார்.

(ஜ-07)






# இலங்கையின் விசேட பாதுகாப்பு திட்டம்!




யாழ்ப்பாணம், நவ. 06

இலங்கையின் பொதுத் தேர்தலை முன்னிட்டு பொலிஸ் திணைக்களம் விசேட பாதுகாப்புத் திட்டத்தை வகுத்துள்ளது.

இலங்கை சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 10,500 பேர் முப்படையைச் சேர்ந்த கூடுதல் அதிகாரிகளின் ஆதரவுடன் பொலிஸார் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

52 வாக்கு எண்ணும் மையங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகள் உட்பட நாடு முழுவதும் 131 வீதி தடுப்புகளை இதுவரை பாதுகாப்பு அதிகாரிகள் அமைத்துள்ளனர்.

இலங்கையில் பொதுத்தேர்தல் 2024 நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இதனையடுத்து 15ஆம் திகதியன்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவு வெளியாகிவிடும்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது. (ஐ)



# கட்சிக்குள் பிளவேதும் இல்லை

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**கேள்வி :**

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் காலம் காலமாக கட்சியின் ஆணைக்கு உட்பட்டு தான் செயற்படுகின்றார்கள் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. அந்த நிலைப்பாட்டை யாழ் மாவட்ட வேட்பாளர்கள் மீறுகின்றார்கள் என்ற பரவலான கருத்து மக்கள் மத்தியில் காணப்படுகின்றது இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:**

இது எனக்கும் வந்த முறைப்பாடு தான். இந்த முறைப்பாட்டுக்கு உண்மையான காரணம் என்னவென்றால் எங்கள் கட்சி பலதரப்பட்டவரையும் உள்ளடக்கிய ஒரு கட்சியாக செயற்படுகின்றது. குறுகிய காலம் கட்சிக்காக உழைத்தவர்களையும் முன்னிலைப்படுத்தியிருக்கின்றோம். எங்கள் வேட்பாளர்களிடையே முரண்பாடு கிடையாது. அவர்கள் சார்ந்த நண்பர்கள் உறவினர்களால் பிரிக்கப்பட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. இது எங்கள் கவனத்திற்கு வந்ததையடுத்து யாழ் மாவட்டத்தில் எங்கள் கட்சியியை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களிடம் இது தொடர்பில் அறிவுறுத்தியுள்ளோம். உண்மையில் இது ஒரு சிலர் செய்யும் தவறு. இனி அப்படிபட்ட தவறுகள் இடம்பெறாது என்பதையும் உறுதியாகக்கூறிக்கொள்கின்றேன்.

**கேள்வி :**

உங்களை அடையாளப்படுத்தும் போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மக்கள் விடுதலை முன்னனியின் மத்திய குழு உறுப்பினர் என்கின்றீர்கள இருப்பினும் தமிழர்களை பொருத்தவரை தேசிய மக்கள் முன்னனி ஒரு இனவாத கட்சியாகவே பார்க்கப்படுகின்றது. இதில் எந்தக்கட்சிக்காக நீங்கள் பணியாற்றுகின்றீர்கள் என்பதை தெளிவாக கூற முடியுமா?

**பதில்:**

நாங்கள் இன்று பிரதிநிதித்துவப்படுத்துவது தேசிய மக்கள் சக்தி தான் அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. தேசிய மக்கள் சக்தி என்ற ஒரு பரந்துபட்ட இயக்கத்திலே மக்கள் விடுதலை முன்னனி ஒரு அங்கமாக இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவம் செய்வதன் காரணமாக நான் ஒரு அரசாங்கத்தின் பிரதிநிதி அல்ல என்பதை இங்கு தெளிவுப்படுத்திக் கொள்கின்றேன்.

**கேள்வி :**

பொதுமக்களுடைய பாதை விடுவிக்கப்படுவதிலிருந்து, பொதுமக்களுக்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுவரை தேசிய மக்கள் சக்தியின் இணைப்பாளராக நீங்கள் எந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றீர்கள் அல்லது மேற்கொள்வீர்கள்?

**பதில்:**

யாழ்ப்பாணத்தில் எடுத்துக்கொண்டாலும் சரி வன்னியை எடுத்துக்கொண்டாலும் சரி எல்லாப் பிரதேசங்களிலும் இராணுவத்தின் விவசாய உற்பத்திகள், மீன்பிடி வளங்கள் என்பவற்றால் அங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே நிச்சயமாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். நவம்பர் 14ஆம் திகதிக்கு பின்னர் இராணுவத்தினரின் இந்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

34 வருடங்களுக்கு பின்னர் பலாலி வீதி தற்போது திறந்தமைக்கு யார் காரணம் என்பது நாங்கள் கூறி தெரிய ணேண்டியதில்லை. ஆனால் தம் அரசியல் நோக்கத்துக்காகவும், பொது நோக்கத்துக்காகவும் பல கட்சிகள் இதுபற்றி பேசி இருக்கின்றன.

இப்போது இதை சொந்தம் கொண்டாடுபவர்கள் என்று பார்க்கும்போது கடந்த காலங்கள் முழுவதும் அரசாங்கங்களோடு இருந்த தமிழரசுக்கட்சி - தமிழ் தேசியக் கூட்டமைப்பு 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் அரசாங்கத்தின் பாதுகாவலர்களாக இருந்தார்கள். அப்போது அவர்கள் சரியாக செயற்பட்டிருந்தால் இன்று இத்தனை வருடங்கள் கழித்து எங்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரே மாத காலப்பகுதியில் இந்தப் பாதையைத் திறக்கவேண்டியதில்லை. எனவே இந்தப்பாதையை திறக்க காரணம் யார் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதே போல் அபகரிக்கப்பட்ட மக்களுடைய காணிகளும் கூடிய விரைவில் மீட்டுக் கொடுக்கப்படும் என்பதையும் தெளிவாக இந்த நேரத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**கேள்வி :**

வடக்கு மாகாண ஆளுநர் பதவியேற்றதிற்கு பிறகு தன்னுடைய தலைமையில் திணைக்களத் தலைவர்களுக்காக நடத்திய கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதி கலந்துகொண்டார் என்பது ஜனாதிபதியின் நேரடியான செல்வாக்கின் அடிப்படையில் ஆளுநருக்கு அழுத்தத்தை கொடுக்கவோ ஆளுநரிடம் தனது செல்வாக்கை பிரயோகிப்பதற்காகவோ என்ற கருத்து காணப்படுகின்றது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:**

இப்படிப்பட்ட கருத்துக்கள் வருவதைத் தவிர்க்க முடியாது. இதற்கு முன்னர் இருந்த அரசாங்கத்திலும் அரசுக்குச் சார்பானவர்களே வடக்கின் ஆளுநர்களாக இருந்திருக்கின்றார்கள். அதனடிப்படையில் பார்க்கும் போது தற்போதைய ஆளுநரைப் பொறுத்தவரை எங்கள் கட்சி சார்ந்தவர் அல்ல. அவர் சிங்களவரும் கிடையாது. கடந்த தேர்தலில் எங்களுக்கு ஆதரவளித்தவரும் கிடையாது. அப்படி இருந்த போதிலும் கூட ஜனாதிபதி அவரை தெரிவு செய்ததற்கான முக்கியமான காரணம். யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களையே உயர் பதவிகளுக்கு நியமிக்க வேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது.

வட மாகாணத்தின் அரச நிர்வாகத்துறை இன்று சீர் குலைந்துள்ளது. அதை கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கின்றது. இதுநாள் வரைக்கும் நீங்கள் எவ்வாறு செயற்பட்டிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இனிமேல் மக்களின் ஆணையை ஏற்று ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கம், நாட்டில் இலஞ்ச ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு எதிரானது. அதைக் கருத்திற் கொண்டு ஆளுநரோடு இணைந்து செயற்படுங்கள் என்ற கருத்தை நிலை நிறுத்தவே நான் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றேன். அதைவிடுத்து எந்தவிதமான அழுத்தங்களை கொடுக்கவும் அல்ல. அதைப்போன்று அவர் சுதந்திரமாக செயற்படுவதற்கான பூரண அதிகாரம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி :**

சகல அரசாங்கத்திலும் அமைச்சராக இருந்த ஒருவர் தற்போதைய அனுர அரசுடன் கைக்கோர்க்க விரும்புகின்றேன் என்ற ரீதியிலும், தற்போதைய ஜனாதியுடன் நல்லுறவைப் பேணுவதாகவும் கருத்தை பரப்புகின்றார். இது உங்களுக்குத் தெரியுமா?

**பதில்:**

25 வருடங்களுக்கு மேல் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்ற டக்ளஸ் தேவானந்தா தங்களுக்கு இனிமேல் மக்கள் மத்தியில் இடம் கிடையாது என்பதை அறிந்ததாலேயே ஜனாதிபதியின் பெயரை பயன்படுத்துகின்றார்.

மக்கள் அனுர குமார திஸாநாயக்கவை விரும்புகின்றார்கள் அதை எங்கள் எதிரிகளும் இன்று ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பது இதைப்பார்க்கும் போதே தெரிகின்றது.

சுமந்திரனிடமும் ஒன்று கூறவேண்டும் சொந்தக்கட்சிக்குள்ளே ஒற்றுமை இல்லாத நீங்கள் எப்படி மக்களை ஒற்றுமையாக வழிநடத்தப்போகின்றீர்கள்.

எனவே தான் உங்களைப் போன்றவர்களுக்கு ஜனாதிபதியின் கட்சியில் இடமில்லை என்பதை கூற விரும்புகின்றேன். மக்களை மாற்றத்தை விரும்புகின்றார்களே தவிர உங்களையல்ல. எங்கள் கட்சிக்குள்ளேயே போதுமான அளவு அமைச்சர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் இதன் போது தெளிவுப்படுதத்த விரும்புகிறேன்.

இந்தச் செவ்வியின் முழுமையான காணொலி வடிவத்தை காலைக்கதிர் யூரியூப் தளத்தில் காணலாம்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.11.2024 இல் வெளியிடப்பெற்றது.